ஐந்து பேருக்கு காந்தியடிகள் காவலர் விருது: தமிழக அரசு

சென்னை, அக். 1: மதுவிலக்கு அமலாக்கப் பணியில் சிறப்பாகச் செயல்பட்ட ஐந்து பேருக்கு காந்தியடிகள் காவலர் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தமிழக அரசு சார்பில் செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

மதுவிலக்கு அமலாக்கப் பணியில் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றிய 5 பேருக்கு காந்தியடிகள் காவலர் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. விழுப்புரம் மண்டலம் மத்திய நுண்ணறிவுப் பிரிவு காவல் ஆய்வாளர் பெ.சின்னகாமணன், விழுப்புரம் சட்டம் - ஒழுங்கு காவல் நிலைய தலைமைக் காவலர் கி.மகாமார்க்ஸ், திருச்சி மாவட்டம் துறையூர் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு தலைமை காவலர் க.கார்த்திக், சேலம் மாவட்ட ஆயுதப்படை இரண்டாம் நிலை காவலர்கள் கா.சிவா, ப.பூமாலை ஆகியோர் விருது பெறவுள்ளனர். அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறவுள்ள குடியரசு தின விழாவின் போது, விருதுகள் வழங்கப்படவுள்ளன. இந்த விருதுடன், பரிசுத் தொகையாக ஒவ்வொருவருக்கும் ரூ.40 ஆயிரம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் அன்பில் மகேஸ் மருத்துவமனையில் அனுமதி

சென்னை, அக். 1: உடல் நலக் குறைவு காரணமாக, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சென்னையில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அரசு நிகழ்ச்சிகள் மற்றும் துறைசார் பணிகளில் ஈடுபட்டு வந்த அவருக்கு செவ்வாய்க்கிழமை மாலை ஜீரண மண்டல பாதிப்பு ஏற்பட்டதாகத் தெரிகிறது.

இதையடுத்து சென்னை அமைந்தகரையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டார். அங்கு பல்வேறு மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அதனடிப்படையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியின் உடல் நிலை சீராக இருப்பதாகவும், விரைவில் அவர் வீடு திரும்புவார் என்றும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னதாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள அன்பில் மகேஸ் பொய்யாமொழியை, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

புகைப்படக் கண்காட்சி...

நடிகர் சிவாஜி கணேசனின் 97– ஆவது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை அடையாறில் உள்ள அவரது மணிமண்டபத்தில் திரைப்பயணம்– வாழ்க்கை வரலாற்றை விளக்கும் வகையில் அமைக்கப்பட்டிருந்த புகைப்பட கண்காட்சியை செவ்வாய்க்கிழமை பார்வையிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், நடிகர் பிரபு.

நாடு முழுவதும் மதுவிலக்கை கொண்டுவந்தால் ஆதரிப்போம்

சட்டத் துறை அமைச்சர் எஸ். ரகுபதி

புதுக்கோட்டை, அக். 1: பாஜக அரசு நாடு முழுவதும் முழு மதுவிலக்கைக் கொண்டு வந்தால், அதனை ஆதரிப்போம் என்று மாநில சட்டத் துறை அமைச்சர் எஸ், ரகுபதி கூறினார்.

புதுக்கோட்டை மாவட்டம், திருமயத்தில் செவ்வாய்க்கிழமை மாலை அவர் செய்தியாளர்களிடம் கூறியது, முழு மதுவிலக்கு கோரும் விடுதலைச் சிறுத்தைகளின் மாநாட்டில் திமுக சார்பில் பங்கேற்பார்கள். திமுகவின் நிலைப்பாடும் அதுதான். ஆனால், அண்டை மாநிலங்களில் மதுவிற்பனை நடைபெறும்போது, தமிழ்நாட்டில் மட்டும் மதுவிலக்கை அமல்படுத்த முடியாது. கள்ளச்சாராயம் பெருகிவிடும்.

காந்தி பிறந்த குஜராத் மாநிலத்தில் இருந்துதான் வந்தோம் என்று சொல்லிக் கொள்ளும் பாஜகவினர்தான் தற்போது நாட்டை ஆளுகிறார்கள். நாடு முழுவதும் மதுவிலக்கை அவர்கள் கொண்டு வந்தால், நாங்களும் ஆதரிப்போம் என்றார் அவர்.

ஆர்எஸ்எஸ் அணிவகுப்புக்கு எதிர்காலத்தில் அனுமதி வழங்க மறுக்கக் கூடாது

உயர்நீதிமன்றம்

சென்னை, அக். 1: ஆர்.எஸ்.எஸ். அணிவகுப்புக்கு எதிர்காலத்தில் அனுமதி மறுக்கவோ, புதிய நிபந்தனைகளை விதிக்கவோ கூடாது என தமிழக காவல் துறைக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

விஜயதசமியை முன்னிட்டு தமிழகம் முழுவதும் அக். 6–ஆம் தேதி 58 இடங்களில் ஆர்.எஸ்.எஸ். சார்பில் அணிவகுப்பு நடத்த அனுமதி வழங்க உத்தரவிடக் கோரி அந்த அமைப்பின் நிர்வாகிகள் வழக்கு தொடர்ந்திருந்தனர்.

இந்த வழக்கு நீதிபதி ஜெயச்சந்திரன் முன் செவ்வாய்க்கிழமை மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, 58 இடங்களில் அணிவகுப்பு நடத்த அனுமதி கோரப்பட்ட நிலையில், 52 இடங்களில் மட்டும் அனுமதி வழங்கப்பட்டது. 6 இடங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. சென்னை மாங்காடு, கொரட்டூர், கோவை ரத்தினபுரி ஆகிய இடங்களில் பொதுக்கூட்டம் நடத்த பள்ளிகள் அனுமதி அளிக்கவில்லை. மெட்ரோ ரயில் பணிகள் காரணமாக மேடவாக்கத்திலும், போக்குவரத்து சாலையில் அணிவகுப்புக்கு அனுமதி கேட்டதால் சேலையூரிலும், குலசேகரன்பட்டினம் தசரா பண்டிகை காரணமாக தூத்துக்குடி மாவட்டம் சாயர்புரம் ஆகிய இடங்களிலும் அனுமதி வழங்கவில்லை என காவல் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டது.

அனுமதி அளிக்க வேண்டும்: இதையடுத்து, 'ஆர்.எஸ்.எஸ். அணிவகுப்புக்கு அனுமதி வழங்குவது குறித்து நிபந்தனையுடன் கடந்த ஜனவரி மாதம் உயர் நீதிமன்றம், விரிவான உத்தரவை பிறப்பித்துள்ளது. அந்த நிபந்தனையுடன் ஆர்.எஸ்.எஸ். அணிவகுப்புக்கு அனுமதி வழங்கவேண்டும். எதிர்காலத்தில், அனுமதி மறுக்கவோ, புதிய நிபந்தனைகளை விதிக்கவோ கூடாது என நீதிபதி ஜெயச்சந்திரன் உத்தரவிட்டார்.

மேலும், மாங்காடு, ரத்தினபுரி, கொரட்டூர் பகுதிகளில் பள்ளி நிர்வாகத்திடம் அனுமதி கடிதம் வாங்கிக் கொடுத்தால், அங்கு அணிவகுப்பு ஊர்வலத்துக்கும், பொதுக்கூட்டத்துக்கும் அனுமதி வழங்கவேண்டும். சாயர்புரத்தில் வரும் 20–ஆம் தேதி அணிவகுப்பு நடத்த முடிவு செய்துள்ளதால், அன்று அனுமதி வழங்கவேண்டும். சேலையூருக்கு பதில் சிட்லபாக்கத்தில் அனுமதி கேட்டால், காவல் துறையினர் அணிவகுப்புக்கு அனுமதி வழங்கவேண்டும்.

மேடவாக்கத்தில் மாற்று வழியில் அணிவகுப்புக்கு அனுமதி வழங்க வேண்டும் என நீதிபதி உத்தரவிட்டார். அந்த உத்தரவில், குறிப்பிட்ட மதத்தினர் வாழும் பகுதி, எதிர் கொள்கை நிலைபாடு கொண்ட மக்கள் வாழும்பகுதி எனக் கூறி ஆர்.எஸ்.எஸ். அணிவகுப்புக்கு அனுமதி மறுக்கக் கூடாது எனவும் நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.

ஈஷா யோக மையத்தில் அரசு அதிகாரிகள், போலீஸார் விசாரணை

மதுக்கரை, அக். 1: சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுப்படி ஈஷா யோக மையத்தில் குழந்தைகள் நலத் துறை, சமூக நலத் துறை அதிகாரிகள் மற்றும் போலீஸார் செவ்வாய்க்கிழமை விசாரணை மேற்கொண்டனர்.

கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற பேராசிரியர் காமராஜ் என்பவர், ஈஷா யோக மையத்தில் உள்ள தனது மகள்களை மீட்டுத் தரக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்திருந்தார். அந்த மனு மீது நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்ற நிலையில், புகார் தொடர்பாகவும், ஈஷா யோக மையத்தின் மீது உள்ள வழக்குகள் தொடர்பாகவும் விசாரித்து முழுமையான அறிக்கையை அக்.4–இல் தாக்கல் செய்ய உயர்நீதிமன்ற நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இந்நிலையில், கோவை மாவட்ட சமூக நலத் துறை அலுவலர் அம்பிகா, குழந்தைகள் நல பாதுகாப்புத் துறை அதிகாரிகள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கார்த்திகேயன் தலைமையிலான போலீஸார் செம்மேடு அருகே உள்ள ஈஷா யோக மையத்தில் செவ்வாய்க்கிழமை ஆய்வு மேற்கொண்டனர். அப்போது, அங்கிருந்த நிர்வாகிகளிடம், ஈஷா யோக மையத்தில் எத்தனை பேர் தங்கியுள்ளனர்? துறவறம் பெற்றவர்கள் யார் யார், என்னென்ன வழக்குகள் நிலுவையில் உள்ளன என்பது குறித்து விசாரித்தனர்.

இதுகுறித்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கார்த்திகேயன் கூறியதாவது: மாவட்ட குழந்தைகள் நல பாதுகாப்பு அலுவலர், சமூக நலத் துறை அலுவலர் உள்ளிட்ட துறை அதிகாரிகள் ஈஷா யோக மையத்தில் நேரில் விசாரணை மேற்கொண்டோம். இந்த விசாரணை நாளையும் (புதன்கிழமை) நடைபெற உள்ளது. அதன்பிறகு முழுமையான விசாரணை அறிக்கையை உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளோம். விசாரணைக்கு ஈஷா யோக மைய நிர்வாகத்தினர் முழு ஒத்துழைப்பு வழங்கினர் என்றார்.

இதுகுறித்து ஈஷா யோக மையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: ஈஷா யோக மையத்தில் உள்ள இரண்டு பெண் பிரம்மச்சாரிகளின் தந்தை பேராசிரியர் காமராஜ், ஈஷா யோக மையத்துக்கு வந்து அவரின் மகள்களை சந்தித்துப் பேசிய சிசிடிவி காட்சிகள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

ஈஷா அறக்கட்டளைக்கு எதிராக தவறான தகவல்களைப் பரப்புவோர் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உளுந்தூர்பேட்டையில் இன்று விசிக மது ஒழிப்பு மாநாடு

விழுப்புரம், அக். 1: கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணை அமைப்பான மகளிர் விடுதலை இயக்கம் சார்பில், மது மற்றும் போதைப் பொருள் ஒழிப்பு மாநாடு புதன்கிழமை (அக். 2) நடைபெறவுள்ளது.

திருச்சி – சென்னை தேசிய நெடுஞ்சாலையில் உளுந்தூர்பேட்டை நகரப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள திடலில் புதன்கிழமை மாலை 4 மணிக்கு மாநாடு தொடங்குகிறது. விசிக தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி. தலைமை வகிக்கிறார்.

மாநாட்டில் திமுக அமைப்புச் செயலர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், மயிலாடுதுறை எம்.பி. ஆர்.சுதா, இந்திய கம்யூனிஸ்ட் தேசிய மகளிரணிச் செயலர் ஆனி ராஜா, அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் தேசிய துணைத் தலைவர் உ.வாசுகி, மதிமுக துணை பொதுச் செயலர் மருத்துவர் ரொஹையா ஷேக் முகமது மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனிதநேய மக்கள் கட்சி, தமிழக வாழ்வுரிமைக் கட்சி உள்ளிட்ட கட்சிகளின் பிரதிநிதிகளும் பங்கேற்றுப் பேசுகின்றனர்.

மது மற்றும் போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பாக தீர்மானங்களும் நிறைவேற்றப்படவுள்ளன.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பெண்கள் மாநாட்டில் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுவதால், அதற்குரிய ஏற்பாடுகளை விசிக மேற்கொண்டு வருகிறது. மாநாட்டுப் பகுதியில் சுமார் 50,000 நாற்காலிகள் போடப்பட்டுள்ளன.

விழுப்புரம் சரக டி.ஐ.ஜி. திஷா மிட்டல் தலைமையில், எஸ்.பி.க்கள் ரஜத் ஆர்.சதுர்வேதி (கள்ளக்குறிச்சி), வி.வி.சாய் பிரனீத் (செங்கல்பட்டு) மேற்பார்வையில், 11 ஏடிஎஸ்பிக்கள், 20 டிஎஸ்பிக்கள், 50 காவல் ஆய்வாளர்கள், 150 உதவி ஆய்வாளர்கள் உள்பட சுமார் 1,200 போலீஸார் மாநாட்டு பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அமலாக்கத் துறையின் அத்துமீறல்களை எதிர்க்காதது ஏன்?

ராமதாஸுக்கு திமுக கேள்வி

சென்னை, அக். 1: அமலாக்கத் துறையின் அத்துமீறல்களை எதிர்க்காதது ஏன் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ராமதாஸுக்கு திமுக கேள்வி எழுப்பியுள்ளது.

அமைச்சர் செந்தில் பாலாஜி குறித்து ராமதாஸ் தெரிவித்த கருத்துகளுக்குப் பதிலளித்து திமுக அமைப்புச் செயலர் ஆர்.எஸ்.பாரதி செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கை:

அமைச்சர் செந்தில் பாலாஜி தியாகம் செய்துவிட்டு சிறை செல்லவில்லைதான். ஆனால், பொய் வழக்குகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட பண முறைகேடு வழக்கில், மத்திய அரசின் எதேச்சதிகார போக்கால் அவர் கைது செய்யப்பட்டார். அவருக்கு அழுத்தம் தந்து துன்புறுத்தி வாக்குமூலம் பெற்று, திமுகவின் மீது மேலும் பொய் வழக்குகள் போடலாம் என்ற கனவு பொய்யாக்கப்பட்டது. அதற்காக 471 நாள்கள் சிறையில் இருந்தார்.

முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் செந்தில் பாலாஜியின் ஜாமீன் மனு மீதான விசாரணையின்போது, 'அமலாக்கத் துறையினர் செந்தில் பாலாஜியிடம் ஏன் நீங்கள் பாஜகவில் சேரக் கூடாது?' எனக் கேட்டதாக அதிர்ச்சித் தகவலை செந்தில் பாலாஜி தரப்பு வழக்குரைஞர் கூறினார். பாஜகவில் அவரைச் சேர்த்து திமுகவுக்கு எதிராகக் களமாட நினைத்தார்கள்.

அதற்கு அடிபணியாமல், அஞ்சாமல் நின்ற உறுதிதான் தியாகம். அது நல்லெண்ணம் கொண்டோருக்கு மட்டுமே புரியும். பாஜக நிழலில் இருக்கும் தைலாபுரத்தில் இருப்பவர்களுக்கு எத்தனை விளக்கம் அளித்தாலும் புரியாது.

அமலாக்கத் துறையை பாஜகவுக்கு ஆள் சேர்க்கும் துறையாக நரேந்திர மோடி அரசு பயன்படுத்தும் சூழலில், ஆட்சியில் இருந்துகொண்டே அதைத் தீரத்தோடு எதிர்த்து திமுக அரசு களமாடிக் கொண்டிருக்கிறது. ஆனால், எதிர்க்கட்சியாக இருக்கும் பாமகவோ, அமலாக்கத் துறையின் அத்துமீறல்களை ஏன் எதிர்க்கவில்லை என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

உளுந்தூர்பேட்டையில் இன்று விசிக மது ஒழிப்பு மாநாடு

சிவகிரி அருகே மின் இணைப்புக்கு லஞ்சம்: உதவிப் பொறியாளர் உள்பட இருவர் கைது

கடையநல்லூர், அக். 1: தென்காசி மாவட்டம் சிவகிரி அருகே மின் இணைப்புக்கு லஞ்சம் பெற்றதாக உதவிப் பொறியாளர் உள்ளிட்ட இருவரை லஞ்ச ஒழிப்புத் துறை போலீஸார் செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

சிவகிரி அருகே தெற்குச் சத்திரம் மங்கம்மாள் சாலையைச் சேர்ந்த சிவன் மகன் மாரிமுத்து (64). இவர் தனது நிலத்தில் அமைத்துள்ள ஆழ்குழாய் கிணற்றில் மோட்டார் பொருத்துவதற்காக மின் இணைப்பு கோரி சிவகிரி மின்வாரிய அலுவலகத்தை அணுகினார்.

அப்போது, உதவிப் பொறியாளரான கடையநல்லூர் முத்துகிருஷ்ணாபுரத்தைச் சேர்ந்த முருகையா மகன் முத்துக்குமார் (42), மின்கம்பியாளரான சிவகிரி பிள்ளையார் கோயில் தெருவைச் சேர்ந்த வெள்ளைச்சாமி மகன் மருதுபாண்டி (58) ஆகியோர் மாரிமுத்துவிடம் மின் இணைப்புக்கு இணையதளத்தில் விண்ணப்பிக்கவும், ரூ. 16,499 கட்டணம் செலுத்தவும் கூறியதுடன், தங்களுக்கு ரூ. 35 ஆயிரம் லஞ்சம் வேண்டும் எனக் கேட்டனராம்.

அதையடுத்து, மாரிமுத்து கடந்த செப். 23ஆம் தேதி இணைப்பு கோரி விண்ணப்பித்தார். செப். 29, 30 ஆகிய தேதிகளில் முத்துக்குமாரும், மருதுபாண்டியும் அந்த நிலத்தை ஆய்வு செய்தனர். செவ்வாய்க்கிழமை (அக். 1) பணம் கொண்டுவர வேண்டும் என மருதுபாண்டி கூறினாராம். இது குறித்து தென்காசி லஞ்ச ஒழிப்புத் துறையில் மாரிமுத்து புகாரளித்தார். அவர்களது யோசனைப்படி, ரசாயனம் தடவிய ரூ. 5 ஆயிரத்தை முத்துக்குமாரிடம் மாரிமுத்து வழங்கினார். மருதுபாண்டி உடனிருந்தார். அதையடுத்து, இருவரையும் லஞ்ச ஒழிப்புத் துறையினர் கைது செய்தனர். அவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடைபெறுகிறது.

SOUTH INDIAN Bank
Experience Next Generation Banking

தி சௌத் இந்தியன் வங்கி லிட்., மதுரை பிராந்திய அலுவலகம்:
முதல் மாடி, YMCA பில்டிங், அல்போரியா ஹோட்டல் எதிரில், 70 அடி ரோடு, எல்லீஸ் நகர், மதுரை, தமிழ்நாடு. Pin-625016. ro1015@sib.co.in, Ph: 0452 2300205

இ- ஏல விற்பனை அறிவிப்பு

Ref: RO/SAR/SN/90/2024-25 தேதி: 01.10.2024

நிதிச்சொத்துக்களின் பிணையம் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணையநல அமலாக்கச் சட்டம் 2002-ன் கீழ், பிணைய நல (அமலாக்க) விதிகள் 2002-ல் கூறப்பட்டுள்ள விதி 8(6) மற்றும் 9(1)-ன்படி அசையா சொத்துக்களுக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.

1) திரு. பவானி S.M. எட்வின் ஜோஸ், M/s. பவானி டிரேடர்ஸ் உரிமையாளர், 8/70-1, S.M.பில்டிங், பெரிஞ்சகோணம், செங்கோடி P.O., கன்னியாகுமரி, தமிழ்நாடு-629177.
மேலும் இருப்பிடம் 4-50, ஜோஸ் இல்லம், பெரிஞ்சகோணம், செங்கோடி P.O., கன்னியாகுமரி, தமிழ்நாடு-629177.
மேலும் இருப்பிடம் 17-242, SM காம்ப்ளக்ஸ், முட்டைக்காடு, குமாரபுரம் P.O., கன்னியாகுமரி, தமிழ்நாடு-629164.
2) திரு. S.M. காட்வின் ஜோஸ், ஜனா இல்லம், 4/71-1, பெரிஞ்சகோணம், செங்கோடி P.O., கன்னியாகுமரி, தமிழ்நாடு-629177.
3) திருமதி. ஜோபினா பவானி எட்வின் ஜோஸ் @ ஜோபினா, 24-15, மேடவிளை, முட்டைக்காடு, குமாரபுரம், கன்னியாகுமரி, தமிழ்நாடு-629177.
மேலும் இருப்பிடம் 4-50, ஜோஸ் இல்லம், பெரிஞ்சகோணம், செங்கோடி P.O., கன்னியாகுமரி, தமிழ்நாடு-629177.
4) திரு. செல்வராஜ் முத்தையன், மேக்கோடு, பெரிஞ்சகோணம், செங்கோடி P.O., கன்னியாகுமரி, தமிழ்நாடு-629177.
மேலும் இருப்பிடம் 4-50, ஜோஸ் இல்லம், பெரிஞ்சகோணம், செங்கோடி P.O., கன்னியாகுமரி, தமிழ்நாடு-629177.

தி சௌத் இந்தியன் வங்கி லிட்., தக்கலை கிளையில் (Secured Creditor) அடமானம் வைக்கப்பட்டு, தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட்டின் (Secured Creditor) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் அடையாள சுவாதீனம் (ஷட்டம் எண்.1 to 4) & கொள்நிலை சுவாதீனம் (ஷட்டம் எண்.5 & 6) செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை மேலே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்திரவாதி(கள்) ஆகியோர் 30.09.2024 தேதிப்படி தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட், தக்கலை கிளைக்கு (Secured Creditor) செலுத்த வேண்டிய தொகை ரூ.3,38,05,671.85 (ரூபாய் மூன்று கோடியே முப்பத்தெட்டு லட்சத்து ஐந்தாயிரத்து அறுநூற்றி எழுபத்தொன்று மற்றும் பைசா எண்பத்தைந்து மட்டும்) பின்வட்டி மற்றும் செலவினங்களுடன் வசூலிக்கும் பொருட்டு "அது இருக்கும் இடத்திலேயே", "என்ன உள்ளதோ அப்படியே", "அது எந்த நிலையிலிருப்பினும்" என்ற அடிப்படையில் 28.10.2024 அன்று ஏல விற்பனை செய்யப்படும் என்று பொதுமக்களுக்கு குறிப்பாக கடன்தார் / உத்திரவாதிக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

சொத்தின் உரிமையாளர் பெயர்:	ஷட்டம் எண்.1: திரு. பவானி S.M. எட்வின் ஜோஸ் ஷட்டம் எண்.2: திரு. காட்வின் ஜோஸ் ஷட்டம் எண்.3: திரு. பவானி S.M. எட்வின் ஜோஸ் ஷட்டம் எண்.4: திரு. பவானி S.M. எட்வின் ஜோஸ் ஷட்டம் எண்.5: திரு. பவானி S.M. எட்வின் ஜோஸ் ஷட்டம் எண்.6: திரு. பவானி S.M. எட்வின் ஜோஸ்

சொத்து விபரம்:- ஷட்டம் எண்.1: கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுகா, குமாரபுரம் (கோத்தநல்லூர்) கிராமம், ரீசர்வே எண்.533/4A-ல் அமைந்துள்ளதும், குமாரபுரம் ஸ்பெஷல் கிரேடு பஞ்சாயத்தில் சுமார் 1439 சதுரடி மொத்த கட்டுமானப் பரப்பில் கதவு எண். 17/239, 240, 241, 242, 242/1 ஆகியவற்றைக் கொண்ட கட்டிடத்துடன் கூடிய 1.50 சென்ட் அளவுள்ள இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், அதிலுள்ள பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதுள்ள பயன்பாட்டு உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்தும் சேர்ந்து திரு. பவானி S.M. எட்வின் ஜோஸ் என்பவருக்கு சொந்தமான இந்த சொத்து. தக்கலை சார்பதிவகத்தில் 29.03.2006 தேதியிட்ட விற்பனைப் பத்திர எண்.926/2006-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கே: சந்திரசேகரன் நாயருடைய சொத்து, தெற்கே: செல்லையனுடைய சொத்து, கிழக்கே: சரோஜம் சொத்து, மேற்கே: ரோடு.

ஷட்டம் எண்.2: கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுகா, மேக்கோடு கிராமம், ரீசர்வே எண்.545/12A-ல் அமைந்துள்ளதும், வேர்லிம்பி நகர பஞ்சாயத்தில் சுமார் 1092 சதுரடி கட்டுமானப் பரப்பில் கதவு எண். 4-71/1-ஐ கொண்ட கட்டிடத்துடன் கூடிய 17.50 சென்ட் அளவுள்ள இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், அதிலுள்ள பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதுள்ள பயன்பாட்டு உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்தும் சேர்ந்து திரு. காட்வின் ஜோஸ் என்பவருக்கு சொந்தமான இந்த சொத்து, வேர்லிம்பி சார்பதிவகத்தில் 17.01.2005 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திர எண்.108/2005-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கே: ரோடு, தெற்கே: வின்சென்ட்-ன் சொத்து, கிழக்கே: ஜஸ்டின் ஜோஸுடைய சொத்து, மேற்கே: பொன்னையனுடைய சொத்து.

ஷட்டம் எண்.3: கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுகா, மேக்கோடு கிராமம், பழைய சர்வே எண்.1831, ரீசர்வே எண்.543/16-ல் அமைந்துள்ளதும், வேர்லிம்பி பஞ்சாயத்தில் சுமார் 2905 சதுரடி அஸ்திவாரப் பரப்பில் கதவு எண். 4/50-ஐ கொண்ட கட்டுமான பணியிலிருக்கும் கட்டிடத்துடன் கூடிய 8.50 சென்ட் அளவுள்ள இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், அதிலுள்ள பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதுள்ள பயன்பாட்டு உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்தும் சேர்ந்து திரு. பவானி S.M. எட்வின் ஜோஸ் என்பவருக்கு சொந்தமான இந்த சொத்து, வேர்லிம்பி சார்பதிவகத்தில் 29.01.2018 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திர எண்.243/2018-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கே: அய்யாக்கண் & செல்வராஜ் ஆகியோரின் சொத்து, தெற்கே: ரோடு, கிழக்கே: மோகன்தாஸுடைய சொத்து, மேற்கே: கோவில் சொத்து.

ஷட்டம் எண்.4: கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுகா, மேக்கோடு கிராமம், பழைய சர்வே எண்.1821 ரீசர்வே எண்.545/12A-ல் அமைந்துள்ளதும், வேர்லிம்பி நகர பஞ்சாயத்தில் சுமார் 1100 சதுரடி கட்டுமானப் பரப்பில் கதவு எண். 8/70/1-ஐ கொண்ட கட்டிடத்துடன் கூடிய 5 சென்ட் அளவுள்ள இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், அதிலுள்ள பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதுள்ள பயன்பாட்டு உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்தும் சேர்ந்து திரு. பவானி S.M. எட்வின் ஜோஸ் என்பவருக்கு சொந்தமான இந்த சொத்து. 10 சென்ட் இடத்தில் ஒரு பகுதியை விற்ற பிறகு வழங்கப்பட்ட இடமாகும். இது வேர்லிம்பி சார்பதிவகத்தில் 17.01.2005 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திர எண்.107/2005-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட பகுதியின் எல்லைகள்: வடக்கே: அனிக்கு விற்கப்பட்ட சொத்து, தெற்கே: முருகேசனுடைய சொத்து, கிழக்கே: ரோடு, மேற்கே: ஜஸ்டின் ஜோஸுடைய சொத்து.

ஷட்டம் எண்.5: கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுகா, குமாரபுரம் (கோத்தநல்லூர்) கிராமம், பழைய சர்வே எண். 3515, ரீசர்வே எண்.393/8-ஐன்ன (விளவன் கோடு பட்டா எண்.5088-ன் கீழ் வரும்) 40 சென்ட் அளவுள்ள இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், அதிலுள்ள பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதுள்ள பயன்பாட்டு உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்தும் சேர்ந்து திரு. பவானி S.M. எட்வின் ஜோஸ்-க்கு சொந்தமான இந்த சொத்து, தக்கலை சார்பதிவகத்தில் 28.06.2010 தேதியிட்ட விற்பனைப்பத்திர எண்.2069/2010-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கே: செல்லக்கண் & பரமேஸ்வரன் சொத்து (RS.No.393/1,2-ஐன்ன நிலம்) தெற்கே: பஞ்சாயத்து ரோடு & திரு. பவானி S.M. எட்வின் ஜோஸ்-ன் சொத்து (RS.No. 393/17A-ஐன்ன நிலம்), கிழக்கே: ஜோசப் & சிவன் நாடாரின் சொத்து (RS.No. 393/3,7-ஐன்ன நிலம்), மேற்கே: அஞ்தாலச்சி குளம் (RS No 393/1 & RS No 393/9-ஐன்ன நிலம்).

ஷட்டம் எண்.6: கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுகா, தக்கலை கிராமம், பழைய சர்வே எண்.1184A, ரீசர்வே எண். 101/12A-ல் அமைந்துள்ள 49.20 சென்ட் அளவுள்ள இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், அதிலுள்ள பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதுள்ள பயன்பாட்டு உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்தும் சேர்ந்து திரு. பவானி S.M. எட்வின் ஜோஸ் என்பவருக்கு சொந்தமான இந்த சொத்து. தக்கலை சார்பதிவகத்தில் 29.01.2018 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திர எண்.351/2018-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கே: அம்போன்சா, சுவாமி & ரத்தினமோனி ஆகியோரின் சொத்து, தெற்கே: பஞ்சாயத்து நடைபாதை, கிழக்கே: பஞ்சாயத்து நடைபாதை & ராஜனுடைய சொத்து, மேற்கே: சுல்தானுடைய சொத்து.

நிர்ணயிக்கப்பட்ட தொகை	ஷட்டம் எண்.1 : ரூ.31,96,000/- (ரூபாய் முப்பத்தொரு லட்சத